


# “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை” திட்டம் : 2 வது கட்ட விரிவாக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்த எழிலார்ந்த காட்சிகள்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (12.12.2025) சென்னை, நேரு உள்விளையாட்டரங்கத்தில், தமிழ்நாடு அரசு பெண்களுக்காகச் செயல்படுத்தும் பல்வேறு முன்னோடித் திட்டங்களின் சாதனைகள், பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசு மேற்கொண்ட முன்னெடுப்புகளை எடுத்துக்காட்டும் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தமிழ்நாட்டின் சாதனைப் பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்டம் நிகழ்ச்சியில், தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்று பயன்பெற்ற பெண் தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு பெற்று தங்கள் வாழ்வு மேன்மையுற உதவிய தமிழ்நாடு அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், சமூக சேவகி பத்மபூஷன் திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகன்நாதன், செல்வி துளசிமதி முருகேசன் மற்றும் மேயர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (12.12.2025) சென்னை, நேரு உள்விளையாட்டரங்கத்தில், தமிழ்நாடு அரசு பெண்களுக்காகச் செயல்படுத்தும் பல்வேறு முன்னோடித் திட்டங்களின் சாதனைகள், பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசு மேற்கொண்ட முன்னெடுப்புகளை எடுத்துக்காட்டும் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தமிழ்நாட்டின் சாதனைப் பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்டம் நிகழ்ச்சியில், எதிர்பாராத விபத்தில் கைகளை இழந்த பீகார் மாநில இளைஞருக்கு குறுக்கு கைமீள் இணைப்பு மறுசீரமைப்பு நுண்அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டு ஒரு கையை செயல்பட வைத்த சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் மருத்துவர் பி.ராஜேஸ்வரி தலைமையிலான பெண் மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் தாங்கள் மேற்கொண்ட சிகிச்சை முறை குறித்து விளக்கினார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் – நேற்று முன்தினம் (12.12.2025) சென்னை, நேரு உள்விளையாட்டரங்கத்தில், தமிழ்நாடு அரசு பெண்களுக்காகச் செயல்படுத்தும் பல்வேறு முன்னோடித் திட்டங்களின் சாதனைகள், பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசு மேற்கொண்ட முன்னெடுப்புகளை எடுத்துக்காட்டும் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தமிழ்நாட்டின் சாதனைப் பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்டம் நிகழ்ச்சியில், காவல்துறையைச் சார்ந்த பெண் கமாண்டோக்களின் சாகச நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டார்.

# தமிழ்நாட்டு மாணவர்களுக்கு வேற்று மாநிலங்களில் ‘ஸ்வயம்’ தேர்வு மையம் ரத்து!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் முயற்சியால் - முடிவை மாற்றிக் கொண்டது ஒன்றிய அரசு!

## மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. தகவல்!



சென்னை,டிச.14-

தமிழ்நாட்டு மாணவர்களுக்கு வேற்று மாநிலங்களில் SWAYAM தேர்வு மையம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதையடுத்து கழகத் தலைவர் அவர்களின் முயற்சியால் முடிவை மாற்றிக் கொண்டது ஒன்றிய அரசு.

இதுதொடர்பாக கழக நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த வழக்கறிஞருமான பி. வில்சன் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவின் தமிழாக்கம் வருமாறு:

“தமிழ்நாட்டைச் சேர்ந்த B.Ed மாணவர்களுக்கு வெளிமாநிலங்களில் ஒதுக்கப்பட்டுள்ள SWAYAM தேர்வு மையங்களை மாற்ற வேண்டும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களிடம் நான் வைத்த கோரிக்கை ஏற்கப்பட்டு, உரிய உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இதனைத் தொடர்ந்து, 16,000 தேர்வர்களில் 14,700 பேருக்கு அவர்களது சொந்த மாவட்டங்களிலேயே தேர்வு மையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. 1,300 தேர்வர்களுக்கு அண்டை மாநிலங்களில் அருகில் உள்ள மாவட்டங்களில் தேர்வு மையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுத்த ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், கற்பகவிநாயகா திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமைச்சர் எஸ்.ரகுபதி, அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா தலைமையில் கலந்து கொண்டு, மகளிர்க்கு உரிமைத் தொகைக்கான வங்கி பற்று அட்டைகளை வழங்கினர். உடன் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம். சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), மற்றும் அரு.வீரமணி, வே.ராஜேஸ் , பூங்குடி எம்.சிவா, தெய்வானை, அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாநகரத்தில் என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி பரப்புரையை வார்டு எண் 41 வாக்கு சாவடி எண் 58 , வார்டு எண் 16 பாகம் எண் 37 வார்டு 37பாகம் எண் 112 , வார்டு எண் 45 பாகம் எண்198, வார்டு எண் 34 அ பாக எண்140 ஆகிய பாகங்களில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பரப்புரை துவக்கி வைத்து மேற்கொண்டார். இந்த நிகழ்வில் மாநகர செயலாளர் மு.மதிவாணன் பகுதிச்செயலாளர்கள் நிலமேகம், தர்மராஜ், விஜயகுமார், சிவக்குமார், வட்டக் கழகச் செயலாளர்கள் கருணாகரன், தங்கவேலு, முருகானந்தம், விஸ்வநாதன், கருணாநிதி மற்றும் BLA2 மற்றும் BLC உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.